**செய்தி வெளியீடு எண் : 446** **நாள் : 04.03.2023**

# நாமக்கல் மாவட்டம், மோகனூரில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை மின் திட்டப்பணிகள் குறித்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 03.03.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார்.

******

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நாமக்கல் மாவட்டம், மோகனூரில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை மின் திட்டப்பணிகள் குறித்து 03.03.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் கரும்பு விவசாயிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் கோரிக்கைகளை விரிவாக கேட்டறிந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

**பின்னர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசும் போது தெரிவித்ததாவது:**

இந்த ஆய்வுக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அமைச்சர் அண்ணன் திரு.வி.செந்தில்பாலாஜி அவர்களே, பாராளுமன்ற மாநிலங்களவை திரு.கே.ஆர்.என் ராஜேஷ்குமார் அவர்களே, அமைச்சர் அருமை சகோதரர் திரு. மா.மதிவேந்தன் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு.பெ.ராமலிங்கம் அவர்களே, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, பல்வேறு விவசாய சங்ககங்கிலிருந்து வருகை தந்துதுள்ள விவசாயிகளே, பத்திரிக்கை நண்பர்களே, இங்கே மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக குறிப்பிட்டுள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் 2010 ஆம் ஆண்டு துவக்கிய திட்டம் என்பதற்காக இத்திட்டமானது நிறுத்தப்பட்டு யாருக்கும் உபயோகம் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டது. வட்டி மட்டுமே இந்த திட்டத்திற்கு ரூ.1,250 கோடி கடந்த ஆட்சிக்காலத்தில் விட்டுவிட்டு சென்றுள்ளார்கள். இந்த திட்டத்தின் மதிப்பு ரூ.1,250 கோடி ஆனால் இந்த திட்டத்திற்கு செலுத்தியுள்ள வட்டி ரூ.1,250 கோடி, இதனால் ரூ.2,500 கோடி யாருக்கும் உபயோகம் இல்லமால் செலவாகியுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு அமைந்தவுடன் விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்து அதனை நிறைவேற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் மோகனூரில் உள்ள சர்க்கரை ஆலையில் இணை மின் திட்டப் பணிகள் முழுமையாக நிறைவு பெறும் என்று உறுதியளித்துள்ளார். அந்த வகையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசானது மக்களுக்கு தேவையான திட்டங்களை கொண்டு சேர்ப்பதில் முதன்மையாக திகழ்ந்து வருகிறது என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அவர்கள், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் அவர்கள், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பெ.இராமலிங்கம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஸ்ரேயா.பி.சிங்,இ.ஆ.ப., அவர்கள், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் திருமதி.மல்லிகா அவர்கள் ஆகியோர் உட்பட அரசு அலுவலர்கள் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in